வேண்டும் என்றும் கேட்டிருந்தார்கள். அன்னதானக் கூடத்திற்கும் 40 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது.

வருகின்ற 25-10-2023 அன்று காலை 9-00 மணியளவில் இந்தப் பணிகள் அனைத்தும் துவங்குவதற்கான துவக்க விழா நடைபெறவிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் தம்பி திரு. பிரபாகரராஜா அவர்ளையும் அழைக்கவிருக்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டதையும் தருகிறோம்; அவர்கள் கேட்காததையும் தருகிறோம்; உறுப்பினர்கள் கேட்டதையும், கேட்காததையும் தரக்கூடிய அரசு மாண்புமிகு முதல்வர் அவர்களின் அரசு என்பதற்கு இது ஓர் உதாரணம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரபாகரராஜா அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 229, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. இராஜேந்திரன், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

229—

தகவல் தொழில்நுட்பப் பூங்கா

***52429—திரு. வி.ஜி. இராஜேந்திரன்:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், சின்னம்மாபேட்டை ஊராட்சியில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2023 அக்டோபர் 11]

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் அருகாமையில் உள்ள சென்னை சோழிங்கநல்லூரில் ELCOT நிறுவனம் 377.08 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.258.56 கோடி முதலீட்டில் ELCOSEZ உருவாக்கியுள்ளது. இதில் ELCOT அனைத்து பொது உட்கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்தி, 6,358 சதுரஅடி பரப்பளவு கொண்ட நிர்வாகக் கட்டடத்தையும் கட்டியுள்ளது.

இந்த ELCOSEZ-ல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்குக் குத்தகை அடிப்படையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தொழில்நுட்ப நிறுவனங்கள் 1.09 கோடி சதுரஅடி பரப்பளவில் தங்களுடைய கட்டடப் பணிகளை முடித்து, தோராயமாக 67,000 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன. இந்தத் தனியார் நிறுவனங்கள் மென்பொருள் உருவாக்கம் (Software Development), பராமரிப்பு மற்றும் சோதனை (Maintenance and Testing), ஆலோசனை மற்றும் வணிக வெளிப்பணி சேவைகள் (Business Process Outsourcing) போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

மேலும், ஏற்றுமதி சார்ந்த குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (MSME), தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவை நிறுவனங்களின் இடத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், 2.33 இலட்சம் சதுரஅடி பரப்பளவில், தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தின் கட்டுமானப் பணிகள் ரூ.88.21 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. இதுவரை ELCOT ஆல் உருவாக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களில் இதுவே பெரியதாகும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியவாறு திருவள்ளூர் மாவட்டத்தில் புதிதாக ஒரு தகவல் தொழில்நுட்பப் பூங்கா உருவாக்குவதற்கு தற்போது தேவை எழவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. இராஜேந்திரன் அவர்கள்.

திரு. வி.ஜி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்குகிறேன். திருவள்ளூர் மாவட்டம் தற்போது தொழில் துறையில் வளர்ந்துவரக்கூடிய பகுதியாக உள்ளது. அதிலும் குறிப்பாக என்னுடைய திருவள்ளூர் தொகுதியில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் மப்பேடு பகுதியில் Integrated Dry Port and

multi–modal logistics hub, புதிய பேருந்து நிலையம், bye–pass சாலை என்று பல்வேறு கட்டமைப்புகள் உருவாகிக்கொண்டிருக்கின்றன. ஏதோ IT Park என்றாலே சோழிங்கநல்லூர் அல்லது OMR–க்கு தான் செல்ல வேண்டும் என்ற நிலை இல்லாமல், சென்னைக்கு ஒரு பக்கமாக இருக்கின்ற தெற்குப் பகுதியில் அனைத்து IT Park–ம் உருவாகிக் கொண்டிருக்கின்றன. இன்றைக்கு CMDA limit–ம் extend செய்யப்பட்டுள்ளது. இதுபோன்று வளர்ந்துவரக்கூடிய பகுதியில், தொழில்நுட்பப் பூங்கா அமைந்தால், அங்கிருக்கின்ற தொழில்நுட்பக் கல்லூரியில் பயிலும் மாணவர்கள், Computer Science படித்த மாணவர்கள், இளைஞர்களுக்கு அவர்கள் படிப்பிற்கான வேலைவாய்ப்பு உருவாகும். ஏனென்றால் இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களின் முயற்சியால் பரந்தூர் விமான நிலையம் வரவிருக்கிறது. அதுவும் ஸ்ரீபெரும்புதூர் பகுதிக்கு அருகாமையிலேயே வரவிருக்கிறது. அதிலும் என் தொகுதிக்கு அருகாமையிலேயே வரவிருக்கிறது. இங்கிருந்து சோழிங்கநல்லூர் பகுதிக்குச் செல்லவேண்டுமானால் கிட்டத்தட்ட 55 கி.மீ. தூரம் செல்லவேண்டியுள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைக் கூர்ந்து ஆய்வு செய்து பரிசீலிக்குமாறு தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–35

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கிற கோரிக்கை நியாயமானதாகும். ஒரே இடத்தில் அனைத்துப் பூங்காக்களையும் உருவாக்கக் கூடாது. ஆனால், தமிழக அரசைப் பொறுத்தவரையில், பல்வேறு துறைகள் தொழில்நுட்ப முன்னேற்றத்திற்காக முயன்று வருகின்றன. உதாரணமாக, தொழில் துறை மற்றும் குறு, சிறு தொழில் துறை உள்ளிட்ட பல துறைகள் தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அடித்தளங்கள், platforms உருவாக்குவதிலும், தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் மற்றும் பன்னடுக்கு கட்டடங்கள் கட்டுவதிலும் ஈடுபட்டுள்ளன. குறிப்பாக, சென்னை மாநகருக்கு அருகில் அமைந்துள்ள ஆவடி தாலுகா, பட்டாபிராமில் 11.41 ஏக்கர் நிலப்பரப்பில் தகவல் தொழில்நுட்பப் பூங்காவை TIDEL Park

நிறுவனம் நிறுவி வருகிறது. இத்திட்டத்தின் முதல் கட்டமாக 5.57 இலட்சம் சதுர அடியில் தரைத்தளம் மற்றும் 21 அடுக்குமாடிகள் கொண்ட கட்டடம் உருவாக்கப்பட்டு வருகிறது. இணைந்து பணியாற்றக்கூடிய இடவசதி, அதாவது co-working space, வணிக மையங்கள், மாடித் தோட்டம் போன்ற நவீன வசதிகளைக் கொண்டதாக இக்கட்டடம் உருவாக்கப்பட்டு வருகிறது. தற்போது கட்டுமானப் பணிகள் மற்றும் குளிரூட்டி வசதி, தீ பாதுகாப்பு, ஒருங்கிணைந்த கட்டட மேலாண்மை அமைப்பு, மின் தூக்கி முதலான வசதிகளை நிறுவும் பணிகள் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, திருவள்ளூர் தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், சின்னம்மாபேட்டை ஊராட்சியில் புதிதாக மேலும் ஒரு தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாகக் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. இராஜேந்திரன் அவர்கள்.

திரு. வி.ஜி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது வாய்ப்பு இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மறுபரிசீலனை செய்யச் சொல்லுங்கள்.

திரு. வி.ஜி. இராஜேந்திரன்: மறுபரிசீலனை செய்வதற்கு முன், கேட்டதும் கொடுப்பவரே கிருஷ்ணா, கிருஷ்ணா என்பது மாதிரி, நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டதையெல்லாம் தமிழ்நாட்டிற்குக் கொடுத்திருக்கிறார்கள். அதனால், திருவள்ளூர் தொகுதியிலே ஒரு IT park, அதாவது தொழில்நுட்பப் பூங்காவையும் அவர் அளிப்பார் என்ற நம்பிக்கையோடு தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அதிகமாக வேலைவாய்ப்பு உருவாக்கும் துறையாக இந்த தகவல் தொழில்நுட்பத் துறை இருக்கிறது. இன்று மாலை கூட, ஆயிரம்

வேலைவாய்ப்புகளை உருவாக்கும் ஒரு புதிய நிறுவனத்தை துவக்கி வைக்க நான் செல்ல இருக்கிறேன். எனது கணிப்பில் இந்த மாநிலத்தில், ஒரு மாதத்திற்கு பத்தாயிரம் வேலைவாய்ப்புகளை புதியதாக உருவாக்குகிறது இந்தத் துறை. இந்த அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் வைத்த கோரிக்கையினை கவனத்தில் வைத்து வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு நாங்கள் பல முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதுவும் குறிப்பாக, அந்த மாவட்டத்தில் ஒரு பெரிய நிறுவனமோ அல்லது தொழில் அதிபர்களோ முன் வந்தால் அவர்களுக்கு ஏற்ப ஒரு தொழில்நுட்பப் பூங்கா அல்லது ஒரு கட்டடம் உருவாக்கப்படுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, முயற்சி செய்வோம் என்று உறுதியளிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)*

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 23 முதல் 31 வரை) @

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. விதி 110–ன்கீழ் அறிக்கை

தஞ்சாவூர் மாவட்டம், ஈச்சங்கோட்டை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் பெயரைச் சூட்டுதல் மற்றும் மாணவர்களுக்கு ஆண்டுதோறும் விருதுகள் வழங்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஒரு நிமிடம். விதி 110–ன்கீழ் அறிக்கை இருக்கிறது. அது முடிந்தவுடனே பேசலாம். உட்காருங்கள். பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

@ *215 முதல் 860 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.*